ஊவா பரணகம பிரதேச சபை - 2024

-- -

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா பரணகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஊவா பரணகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று பிழையாக இருந்ததுடன் கணக்குகளின் பிரகாரம் சரியான காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதி ரூபா 17,732,160 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 15,553,043 ஆகும்.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகளுடன் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 557,441 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பதிவேடுகளைப் பரீட்சித்து எதிர் வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்பு மீதி ரூபா 164,308 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியில் 03 கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 86,119,874 ஆக இருந்ததுடன் பட்டோலையின் பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 88,773,701 ஆனமையால் ரூபா 2,653,827 வேறுபாடு காணப்பட்டது.	பதிவேடுகளைப் பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு மற்றும் பட்டோலை மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும்

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள், பிரமானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 பிரதேச சபைகள் (நிதி நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம்	பாதீட்டு முறைமை மற்றும் அதற்குரிய காரணங்களை காண்பிக்கின்ற கூற்று ஒன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் விதி 193 இன் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்கப்படும்.	நிதிகூற்றுக்களுடன் சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு	சபையினால் நிர்வகிக்கப் படுகின்ற 125 மயான நிலங்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	125 மயான நிலங்களில் 110 இனை கையேற்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	கையேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும்.
(இ)	2008 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 32/91 (iii) மற்றும் 12/2021 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அரசியல் உரிமை உடைய உத்தியோகத்தருக்கு உள்ளூராட்சி நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மாதம் ஒன்றிற்கு உரித்தான 08 கடமை விடுமுறை நாட்கள் தவிர 2018 மார்ச் 29 ஆந் திகதி முதல் 2023 மார்ச் 19	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	விசாரணைகள் மேற்கொண்டு அதன் பரிந்துரையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

		வரை 445 நாட்களில் உள்ளபடியான சேவை நிலையத்தில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்ட காலத்தில் முன்னாள் தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் கிலோமீற்றர் 32047 தூரம் ஓடுவதற்கான கிரயம் ரூபா 613,720 ஆன எரிபொருள் லீற்றர் 4006 முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.		
(ஈ)	2019 மே 08 ஆந் திகதிய இலக்கம் 2122/29 அதிவிசேட வர்த்தமானி விதி இலக்கம் 02	பிரதேச சபையின் முன்னாள் தலைவரால் அதிகாரப் பிரதேசத்தில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடாத 224 நாட்களுக்காக கூட்டிணைந்த இணைந்த படியாக ரூபா 190,500 பெறப்பட்டிருந்ததுடன் சாரதிக்கும் இணைந்த படியாக ரூபா 100,450 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	மேற்படி

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,865,748 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,859,622 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
வீதவரியும் வரியும்		
2020 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 17,070 நிலுவை நீர் வரி மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான நிலுவை நீர் வரி ரூபா 500,772 அறவிடப்பட்டிருக்க வில்லை.	ரூபா 500,772 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 14,767,947 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 46,662,605 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.	மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான பட்டோலைகள் தயாரித்து உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைக்குச் சொந்தமான ஒரே ஒரு பொது மலசலகூடம் ஆன லுணுவத்த கூட்டுறவு சங்கத்தின் பின்பக்கத்தில் பொது மலசலகூடம் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற அசுத்தமான நிலையில் காணப்பட்டது.	பிரதேச சபையில் ஊழியர் வெற்றிடங்களின் காரணமாக வியாபார சங்கத்தின் மூலம் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி அறவிடாமல் நடாத்திச் செல்லப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் பொது மக்களுக்காக தேவையான வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.
(ஆ)	போம்புர எல்ல சுற்றுலா வலயத்திற்காக தேவையான சுகாதார வசதிகளை வழங்குவதற்கு ஊவா பரணகம பிரதேச செயலாளரால் காணிப் பகுதி ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதும் உரிய நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மலசலகூட முறைமை ஒன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. இதற்காக கணிசமான கிரயம் ஒன்றை செலிவட வேண்டிய ஏற்படுகின்றமையால் சுற்றுலா அமைச்சில் இருந்து நிதியேற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.	மேற்படி
(இ)	பாதீட்டின் மூலம் செலவினங்களுக்கான நிதியேற்பாடு ஒதுக்கப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பில் ரூபா 72,260,163 மீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நிலையான வைப்பு பொதுச் சபை அங்கீகாரத்தில் விடுவிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் சுற்றுலா முன்மொழிவுகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சபை நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் போது சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்த 106 விண்ணப்பங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பரிந்துரை வழங்கப்படாது இருந்ததுடன் அந்த வர்த்தக வியாபார அனுமதிப் பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படுகின்றது.	வியாபர அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுகாதார மருத்துவ உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்ட போதும் பரிந்துரை வழங்குதலில் தாமதம் ஏற்பட்டமையால் வியாபர அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு முடியாதுள்ளது.	சுகாதார மருத்துவ உத்தியோகத்தருக்கு அறிவித்து விரைவாக பரிந்துரை பெறப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 94,068,736 செலவில் ஊவா பரனகம சந்தை வளவு, 04 மீன் கடைகள் மற்றும் 06 கடைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சந்தை நிலம், 01 மீன் கடை மற்றும் 06 கடைகள் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	லுணுவத்த சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 04 மீன் கடைகளில் 03 கடைகள் வாடகைக்கு வழங்குவதன் மூலம் மாதாந்த வாடகை சபைக்கு கிடைப்பதுடன் மிகுதி கடையினை கேள்வி கோரப்பட்ட போதும் அதற்காக கொள்வனவாளர்கள் முன்வந்திருக்கவில்லை.	மாற்று வழி வருமானத்தை உழைப்பதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.
(ஆ)	சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது சபைக்கு கையளிக்கப்பட்ட நான்கு காணி கூறுகள் எந்த ஒரு பொது நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.	காணிப் பகுதிக்கு பாதுகாப்பு வேலி நிர்மானிக்கப்பட்டதுடன் எஞ்சியுள்ள காணிப் பகுதிகளுக்காக வேலிகளை அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனின் ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக பிரதேச அபிவிருத்தி செயற்திட்ட உதவியின் அடிப்படையில் ரூபா 2,590,000 பெறுமதியான பெலர் இயந்திரம் மற்றும் ரூபா 49,900 பெறுமதியான உறைகள் தைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	பெலர் இயந்திரம் தேவையான பெலர் திரைகள் மற்றும் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான குழு அங்கீகாரம் 2025 மே 02 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் கூறுவிலை கோரி தேவையான உபகரணங்களைப் பொருத்தி அந்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இயந்திரத்தைப் பயன்படுத்தி கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை செயற்திறனாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 353,164 பெறுமதியான குறைவாக காணப்பட்ட பொருள் வகைகளை 06 இற்கு உரிய பொருள்களில் 07 அலகுகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக பரிசோதனை நடாத்துவதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அறிக்கையின் பிரகாரம் 07 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 18 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நூலகர் பதவி ஒன்று வெற்றிடமாகக் காணப்பட்டது.	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில் இந்த நிறுவனத்திற்கும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் அவர்கள் பல்வேறு சேவைகளில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் நூலகர் சேர்க்கப்பட்ட பின்னர் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.

3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான 02 டெக்டர், 02 டேலர் மற்றும் ஒரு வீதி செப்பனிடுகை என்பன நீண்ட காலமாக பிரதேச சபை அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	02 டெக்டர் மற்றும் 02 டேலர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பயிற்சி பெற்ற சாரதிகள் காணப்படாமையினா காரணமாக அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த டெக்டர் மற்றும் டெய்லர்கள் ஏனைய நிறுவனத்திற்கு வழங்குவதற்கோ அல்லது பரிமாற்றிக் கொண்டு அதற்குப் பதிலாக டிப்பர் வண்டி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வீதி செப்பனிடுகை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையினால் அதனை பழுதுபார்த்தல் தாமதமடைந்துள்ளது.	சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்தல் வேண்டும்.

(ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் 06 டெக்டர்களுக்காக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இரண்டு வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மீதியாக உள்ள JCB இயந்திரம் மற்றும் ஸ்கிட் லோடர் வண்டி, பொக்கெட் வண்டி போன்ற வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எரிபொருள் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனை பின்பற்றப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஊவா பரணகம பிரதேச சபையினால் 2024 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் 2024 பாதீட்டு வெளியீட்டின் பிரகாரம் முன்மொழியப் பட்டிருந்த 08 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 04 செயற் திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.	2024 இன் பாதீட்டு முன்மொழிவின் கீழ் 08 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன் 04 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு முன்மொழிவு ஒன்று 2025 இன் பாதீட்டு முன்மொழிவின் கீழ் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக பிரதேச சபை தயாரித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் மற்றும் செலவினத்தில் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பீடு செய்த போது 05 வருமான விடயங்களில் 15 சதவீதம் முதல் 107 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான முரண்களும் காணப்பட்டது.	மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் பாதீடு எதிர்வு கூறப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. காலநிலை மாற்றங்களால் பொருள் விலைகள் மாற்றமடைந்தமை மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் மாற்றமடைந்துள்ளதுடன் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்து முரண்களைக் குறைக்கும் வகையிலும் பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கழிவு நீர் சுத்திகரிப்பிற்காக நகரத்தில் வடிகாண் முறைமை மற்றும் நகரத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை.	போதியளவான ஊழியர்கள் காணப்படாமையின் அடிப்படையில் தற்போது அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் உக்காத கழிவுப் பொருள்களை சேகரித்தல் எதிர்காலத்தின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான களஞ்சிய வசதிகளைத் தயாரிப்பதற்கு தேவையான நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.	பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள் அகற்றுதல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	போம்புறு எல்ல சுற்றாடல் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுகள் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள காணியில் எரிக்கப்பட்டிருந்தது.	உரிய ஊழியர்களுக்கு கூட்டுப் பசளைத் தளத்தில் அல்லது அருகில் எரிக்காமல் இருக்குமாறு வேலைக் கட்டுப்பட்டு உத்தியோகத்தர் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	சுற்றாடல் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.